22 DEC 2016
UNIVERSITY,

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம், புவியியற்றுறை
### இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு 2013/2014 (October/November 2016)

| | | |
|---|---|---|
| **OGY 2213** | அனர்த்த முகாமைத்துவம் **(Disaster Management)** | நேரம் **03** மணித்தியாலங்கள் |

- எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

1) அ. CRED (Centre for Research on the Epidemiology of Disasters) என்னும் அமைப்பு "அனர்த்தம்" என்பதனை எவ்வாறு வரைவிலக்கணம் செய்துள்ளதெனக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ. அனர்த்தம் ஒன்றினது உருவாக்கப் பின்னணியினை தெளிவாக எடுத்துக் காட்டுக.

(08 புள்ளிகள்)

இ. ஒரு சமுதாயத்தில் நலிவுறு நிலையைத் தீர்மானிக்கின்ற காரணிகளை வகைப்படுத்தி, அவற்றினை விளக்குக.

(12 புள்ளிகள்)

) அ. இயற்கை அனர்த்தங்களை வகைப்படுத்தி, அவற்றுள் இலங்கைக்குச் சாத்தியமானவை என நீர் கருதுகின்ற அனர்த்த வகைகளையும் மற்றும் அவற்றின் போக்கு இலங்கையில் எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்தும் கருத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. அனர்த்தங்களுள் பனிச்சரிவு அல்லது பனிப்பாறை வழுக்குகை (Avalanche) என்றால் என்ன என்பதனை வரையறுத்து, இது இலங்கைக்குச் சாத்தியமற்ற ஒன்றாக இருக்கின்றபோதும் அது சார்ந்த அறிவு ஏன் அவசியம் என்பது குறித்து விளக்கமளிக்குக.

(13 புள்ளிகள்)

அ. ஒரு சமுதாயத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின் வெற்றி எக்காரணிகளில் தங்கியுள்ளதெனக் குறிப்பிட்டு, விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. மூன்று பிரதானமான நிலைகளை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப் படுகின்ற அனர்த்த முகாமைத்துவச் செயன்முறையானது "அனர்த்த முகாமைத்துவ வட்டம்" என்ற கட்டமைப்புக்கூடாக எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது என்பதனை தெளிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

4) அ. "சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட அனர்த்த அபாய நிலைக் குறைப்பில் பாடசாலையானது முக்கிய அங்கமாக விளங்குகின்றது" இக்கூற்றின் பின்புலத்தினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் அனர்த்தக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைத்து, அனர்த்தக் கல்வி தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள விடயங்கள் மற்றும் சர்வதேசரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முயற்சிகள் தொடர்பில் விபரிக்குக.

(07 புள்ளிகள்)

"சமீப காலங்களில் இலங்கையில் மனித - யானை முரண்பாடு உயிரியல் அனர்த்தங்களில் தீவிர கவனம் செலுத்தப்படவேண்டிய ஒரு பிரச்சினையாகத் தலை தூக்கியுள்ளது" அதிலிருந்து இவ்விரு குழுக்களையும் பாதுகாக்க அனர்த்த முகாமைத்துவப் பின்னணியில் நீர் முன்வைக்கும் விடயங்கள் குறித்து திட்ட வரைவு ஒன்றினை வரைக.

(20 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ. அவசர தேவைப் பொதி (Emergency Supply kit).
ஆ. இலங்கையில் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பு
இ. வெள்ள அனர்த்தமும் பாதுகாப்பும்.

(12.5x2=25 புள்ளிகள்)